THE HINDU

3 - MAY 2024

# EC asks political parties to cease registering voters for post-poll welfare schemes

The Hindu Bureau
NEW DELHI

The Election Commission (EC) on Thursday directed all political parties to cease enrolling or registering voters for post-election beneficiary-oriented schemes under the "guise of surveys", saying it amounts to corrupt practice under election law.

The poll body said some political parties and candidates have been engaging in activities that blur the lines between legitimate surveys and partisan efforts to register individuals for post-election beneficiary-oriented schemes.

### BJP's complaint

A potential *quid pro quo* for voting and inducements amounts to bribery or corrupt practice, the EC said in an advisory to all national and regional political parties.




The Election Commission advisory comes following a complaint by the BJP.

The EC advisory comes following a complaint by the BJP which had said that the Congress's "*Ghar Ghar* Guarantee" outreach to people was a "corrupt practice amounting to bribery" and urged the poll body to put a stop to it. Under this initiative, the BJP claimed that the Congress and its workers are distributing "guarantee cards" to households, presenting them with application papers for accessing the party's promised benefits.

In its advisory, the EC cited five instances that "obscure the distinction between legitimate surveys and biased attempts to enrol people in programmes for political gain, all while masquerading as legitimate survey activities or efforts to inform people about government programmes or party agendas related to potential individual benefits".

These included newspaper advertisements urging voters to register themselves for benefits by giving missed calls on a mobile or calling on a telephone number, distribution of guarantee cards giving details of schemes along with an attached form asking for details of voters and distribution of forms seeking details and seeking online registration.

THE HINDU
13 - MAY 2024

# PMK MLA urges Chief Secy. to relax MCC norms in State

PMK legislator S. Sadhasivam on Thursday submitted a representation requesting Chief Secretary Shiv Das Meena to relax the norms of the Model Code of Conduct (MCC) so that MLA offices could be reopened. In his representation to the Chief Secretary, he recalled that the polling in Tamil Nadu had concluded and pointed out that the counting of votes was only scheduled for June 4. There were issues such as water shortage in many places, he said, adding: "When we contact government officials, as elected representatives of the people, we are told that the MCC is in place. The people are affected and we are not able to discharge our duties.."

THE HINDU
13 - MAY 2024



# Flying of drones over three counting centres banned

The Greater Chennai City Police (GCP) Commissioner, Sandeep Rai Rathore, has issued orders banning flying of drones and other unmanned aerial vehicles till June 4 over three counting centres in the city, where the polled electronic voting machines have been kept. Last week, Chennai Corporation Commissioner J.Radhakrishnan, who is also the District Election Officer, and City Police Commissioner, along with other officials, inspected security arrangements at the three counting centres – Queen Mary's College, Mylapore; Loyola College, Nungambakkam and Anna University, Guindy. The centres have been provided with a four-tier security cover.

DECCAN CHRONICLE
3 - MAY 2024

# EC BANS POST-POLL BENEFITS SURVEYS

DC CORRESPONDENT
NEW DELHI, MAY 2

The Election Commission (EC) on Thursday asked all political parties to stop registering voters for post-election beneficiary-oriented schemes "under the guise of surveys". The EC said such an act has the potential of quid pro quo for voting and inducements amount to bribery.

This comes following complaints by the BJP against the Congress' "guarantee card" scheme in which it is seeking online registration.

In a letter to the presidents of all national and state political parties, the EC said it has taken a serious view of activities by political parties and candidates seeking details of voters under the guise of various surveys for their proposed beneficiary schemes. "The EC, during the ongoing elections, has come across instances where some political parties and candidates have been engaging in activities that blur the lines between legitimate surveys and partisan efforts to register individuals for post-election beneficiary-oriented schemes," the poll body said.

DECCAN CHRONICLE
3 MAY 2024

# Tenkasi AIADMK and BJP candidates raise suspicion on strong room CCTV malfunction

M. ARULOLI | DC
TENKASI, MAY 2

The AIADMK candidate of the Tenkasi Lok Sabha constituency, Dr. K. Krishnasamy, and BJP candidate John Pandian have demanded a detailed report on the malfunctioning of 90 CCTV cameras fitted to monitor the strong room where the EVMs for Tenkasi constituency have been stored.

The EVMs, collected from polling stations in Tenkasi constituency, have been kept in the strong room set up at a private college at Kodikuruchi village, in Kadayanallur taluk of Tenkasi district.

The strong room is being monitored round-the-clock with a three-layer security arrangement. A total of 210 CCTV cameras have also been installed in and around the strong room.

Of the 210 cameras, 90 went off for around five hours on Tuesday (April 30), reportedly due to thunderstorms and rain. The CCTV cameras affected due to the heavy rain around 3.30 pm on Tuesday were restored by 8 pm the same day.

The AIADMK candidate of the constituency raked up the suspicion that so many CCTV cameras going off at the same time might be intentional. Krishnasamy demanded a detailed report on the issue from the Election Commission of India and wanted the chief electoral officer of Tamil Nadu, Sathyabrata Sahoo, to visit the strong room in Tenkasi constituency to ensure the security arrangements.

BJP candidate John Pandian, in a petition to the Tenkasi district returning officer, A.K. Kamal Kishore, demanded a detailed report on the malfunctioning of 90 CCTV cameras at the same time in the strong room.

DECCAN CHRONICLE

13 - MAY 2024

DECCAN Chronicle

3 MAY 2024

# Delay in voting figures: EC must be transparent

The question that Opposition leaders and public intellectuals raise about the Election Commission of India on what they perceive as lack of transparency and the will to act on time requires the immediate attention on the part of the poll body and corrective action.

One of the serious allegations is that the EC took 11 days to come out with an official release on the final percentage of polling in the first phase of election to the 18th Lok Sabha. It is a fact that a press release of the EC, published through the Press Information Bureau of the Government of India on April 30, 2024, put out the final figure of polling in the first phase as 66.14 per cent; it also recorded the final figure for the second phase as 66.71 per cent. These are against 69.43 and 69.17 per cent, respectively, in the 2019 elections.

The public is given to understand that the EC had indeed put out the same figures on its app the day after the polling for the first phase. The EC may have its reasons to take the technological route and update the data but it must realise that the public collects authentic information when it places it in the public domain as it has done on April 30. It is untenable that the EC does not follow a regular, familiar route in disseminating critical information related to the general election. It must form and then follow a protocol for such key elements of its functioning.

There is also criticism of the EC for its failure to update the number of actual voters in each constituency and the number of voters who exercised their franchise. It defies logic that the EC provides an occasion for political parties to raise such serious allegations. The EC conducts elections on the basis of an electoral roll which goes through several rounds of revision before being finalised ahead of the voting. It gets the form on voting in each booth a day after the date of polling and hence should have all the data, including on the number of people who have voted in each constituency, without much difficulty. There is no reason why it chooses not to publish it as soon as it has it.

People in the know of the process claim that there cannot be foul play with respect to the numbers since representatives of the political parties at the booth level have the same set of data, and they can verify them on the date of counting. However, it is incumbent upon the mammoth machinery of the EC to get the data collated and aggregated; it is not a great idea to depend on booth-level agents of the parties who will have little idea of the whole picture. Moreover, the general public would rather have the data from the constitutional body mandated to conduct the polls, and not from anyone else.

The EC last week sent notices to both the BJP and the Congress on the alleged violation of the Model Code of Conduct. In fact, the charge against Prime Minister Narendra Modi was pretty serious in that he is alleged to have made communally divisive speeches during election rallies. There has been no action from the poll regulator and the Prime Minister keeps making speeches that have similar content nonstop. The EC will be failing in its job if it is unable to intervene in time and stop the wrongdoers. It must do the right thing and then be seen to be doing so.

DECCAN CHRONICLE
3 MAY 2024

# CAN'T DEVISE POLICY IN MIDDLE OF POLLS, HC ON DEEPFAKES

DC CORRESPONDENT
NEW DELHI, MAY 2

The Delhi high court on Thursday directed a lawyers' organisation to give a representation to the Election Commission of India (ECI) on its plea on the use of deepfake technologies in the political campaign for the 2024 Lok Sabha elections.

The court asked the ECI to decide the representation given by petitioners expeditiously, keeping in mind the urgency of the matter.

A bench of acting chief justice Manmohan and Justice Manmeet P.S. Arora disposed of the petition, saying it cannot devise a policy in the middle of the elections.

The court said it trusts the ECI, which is a constitutional body, to act on the matter.

The bench said, "We can't devise a policy today in the midst of elections. Once it is entrusted to the ECI, the court's interdiction at this stage will not be proper. At this moment, the courts will not give any direction. You'll have to live with it. All of this is to be done before the elections. At the 11th hour, courts cannot interfere."

"At this moment it will not be proper for the court to intervene with the jurisdiction of the ECI. Let us trust the ECI," it said.

DECCAN CHRONICLE
3 MAY 2024

# Stop seeking voter details under guise of surveys: EC

DC CORRESPONDENT
NEW DELHI, MAY 2

The Election Commission (EC) on Thursday asked all political parties to stop registering voters for post-election beneficiary-oriented schemes "under the guise of surveys". The EC said such an act has the potential of quid pro quo for voting and inducements amount to bribery. This comes following complaints by the BJP against the Congress' "guarantee card" scheme in which it is seeking online registration.

In a letter to the presidents of all national and state political parties, the EC said it has taken a serious view of activities by political parties and candidates seeking details of voters under the guise of various surveys for their proposed beneficiary schemes.

"The EC has come across instances where some political parties and candidates have been engaging in activities that blur the lines between legitimate surveys and partisan efforts to register individuals for post-election beneficiary-oriented schemes," the poll body said.

The commission said the act of calling upon individual electors to register for post-election benefits may create an impression of the requirement of a one-to-one transactional relationship between the elector and the proposed benefit. and has the potential to generate quid pro quo arrangement for voting in a particular way, thereby, leading to inducement.

The EC, while acknowledging that generic and general electoral promises are in the realm of permissibility, noted that such activities obscure the distinction between authentic surveys and biased attempts to enrol people in programs for political gain, all while masquerading as legitimate survey activities or efforts to inform about government programs or party agendas related to potential individual benefits.

THE TIMES OF INDIA
13 - MAY 2024

# EC: It's bribery to engage voters for post-poll benefits

Times News Network

**New Delhi:** Election Commission on Thursday directed all political parties, their members and agents to immediately stop enrolling or registering voters for post-election beneficiary-oriented schemes under the guise of surveys. This came ahead of the third phase of Lok Sabha elections on May 7.

Taking note of several instances of parties seeking details of voters, EC said it has taken a "serious view of this corrupt practice of bribery" under the Representation of the People Act. "Some political parties and candidates have been engaging in activities that blur the lines between legitimate surveys and partisan efforts to register individuals for post-election beneficiary-oriented schem-es," the commission said.

EC said the act of inviting or calling upon individual electors to register for post-election benefits may create an impression of the requirement of one-to-one transactional relationship between voters and the proposed benefit and has the "potential to generate quid-pro-quo" arrangement for voting in a particular way and thereby leading to inducements. EC cited examples of putting advertisements in newspapers to urge voters to register themselves for benefits for political gain.

## HC refuses to issue directions on use of deepfakes in polls

**New Delhi:** Observing that "constitutional authorities must be trusted", the Delhi high court Thursday left it to the Election Commission of India to deal with the issue of deep fake technologies being used in the Lok Sabha poll campaigning and refused to issue any directions to EC "in the middle of elections". TNN

THE NEW INDIAN EXPRESS
13 - MAY 2024

# EVM strong rooms in city declared 'red zones'


EXPRESS NEWS SERVICE
@ Chennai

FOLLOWING orders of Chennai City Police Commissioner Sandeep Rai Rathore, places where the Electronic Voting Machines (EVM) are stored have been declared as 'red zones' and flying of drones and other unmanned aerial vehicles will be prohibited in these areas until June 4.

The EVMs that were used for Lok Sabha elections in the three constituencies in the city have been stored in strong rooms at Loyola College in Nungambakkam, Queen Mary's College in Mylapore and Anna University in Guindy. It may be noted that flying of drones and other unmanned aerial vehicles is already banned under CrPC section 144 in Chennai.

The DMK had petitioned the Election Commission of India (ECI) three days ago seeking steps to designate the areas housing strong rooms 'drone no-fly zones', besides ensuring uninterrupted CCTV surveillance of the rooms.

The party's appeal came in the backdrop of an incident regarding CCTV cameras malfunctioning for approximately 20 minutes in the strong room containing EVMs for the Nilgiris parliamentary constituency. The DMK had expressed concern that drones can be used to interfere with the functioning of CCTVs.



A central armed force personnel standing guard at strong room | EXPRESS

THE TIMES OF INDIA
3 - MAY 2024

# Flying of drones banned near EVM storage areas

**Chennai:** The city police have banned flying of drones near buildings where electronic voting machines are stored. The ban under section 144 of CrPC will be in force up to counting day on June 4. The EVMs used in polling for Lok Sabha Elections have been stored in the strong rooms at Loyola College, Nungambakkam; Queen Mary's College, Mylapore; and Anna University, Guindy. TNN

THE NEW INDIAN EXPRESS
3 - MAY 2024

INDIAN EXPRESS IS NOT AN INDUSTRY. IT IS A MISSION.
— Ramnath Goenka

# EC NEEDS TO PUBLICLY SHARE DATA TO ENHANCE TRUST IN POLL PROCESS

THE delay by the Election Commission of India (ECI) in putting out the final figures of polling in the first and second phases of the Lok Sabha election has generated a completely avoidable controversy. The ECI decision not to put out constituency-wise registered voter numbers is seen as a deviation from the established practice of making this data available immediately after the end of polling. Concerns have been raised about the non-availability of constituency-wise polling percentages and the total number of registered voters in each constituency. These two figures would have helped political parties to cross-check the percentages in constituencies where polling has concluded.

The ECI's argument that the figures relating to station-wise votes polled are recorded in Form 17 and available with all the candidates has failed to pacify those raising questions over the motive behind withholding the information from the public. Booth-level turnout data is recorded in absolute numbers in Form 17 at the end of voting in the presence of the candidates' polling agents. This booth-level data is consolidated at the constituency level to calculate the polling percentage. Form 17, therefore, ensures transparency and integrity of the polling data. It serves as the primary record, because the figures recorded in it cannot be altered or tampered with. The ECI has a robust system for recording and counting votes. But the delay in publishing the final polling percentage and the absence of data on constituency-wise registered voters and polling percentages has led to some avoidable questions.

The ECI's deviation has raised concerns about transparency and accountability. The commission would do well to stick to established protocols and avoid creating unnecessary doubts in the minds of the people about the integrity of data it puts out. As an autonomous constitutional body, the ECI is duty-bound to make sure that while conducting free and fair elections it maintains transparency in its operations to ensure public trust in the electoral process. The commission should forthwith place the data on registered voters in each constituency and the constituency-wise voting percentage on its website. This would remove doubts over differences between the provisional and final polling figures that have been released. The political parties, meanwhile, need to tone down their criticism of the commission in the interest of maintaining public trust in the electoral process and our democracy.

DT Next

3 - MAY 2024

# Stop registering voters for schemes under guise of surveys, says EC

**NEW DELHI: The Election Commission Thursday asked political parties to immediately stop and 'desist' from any activity that involves registering people for post-election beneficiary-oriented schemes through advertisements, surveys or mobile applications.**

The election watchdog said it has taken a "serious view" of political parties and candidates seeking details of voters under the guise of various surveys for their proposed beneficiary schemes and cautioned that it amounts to a corrupt practice under the electoral law.

The poll panel pointed out that some political parties and candidates have been engaging in activities that "blur the lines between legitimate surveys and partisan efforts" to register individuals for post-election beneficiary-oriented schemes.

In an advisory to all national and state-level political parties, the commission asked them to immediately "cease and desist" from any activity that involves registering people for such post-election schemes through advertisements, surveys or mobile applications.

At the same time, the poll panel acknowledged that "generic and general electoral promises" are in the realm of permissibility.

It said the act of inviting or calling upon individual electors to register for post-election benefits may create an impression of the requirement of a one-to-one transactional relationship between the elector and the proposed benefit, and has the potential to generate a quid pro quo arrangement for voting in a particular way, thereby leading to inducement.

The EC noted that such activities obscure the distinction between authentic surveys and biased attempts to enrol people in programmes for political gain–all while masquerading as legitimate survey activities or efforts to inform about government programmes.

இந்து தமிழ் திசை

3 MAY 2024

### சென்னையில் வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள

# 3 இடங்களை சுற்றி ட்ரோன் பறக்க தடை

## அடுத்த மாதம் 4-ம் தேதி வரை தடை தொடரும்

●சென்னை

தமிழகத்தில் மக்களவை தேர்தல் வாக்குப் பதிவு கடந்த மாதம் 19-ம் தேதி ஒரே கட்டமாக நடைபெற்று முடிந்துள்ளது.

சென்னையில் வாக்குப் பதிவுக்கு பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (இவிஎம்) நுங்கம்பாக்கத்தில் உள்ள லயோலா கல்லூரி, மெரினா கடற்கரையில் உள்ள ராணி மேரி கல்லூரி, கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மேலும், இங்கு சுழற்சி முறையில் 4 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அதுமட்டும் அல்லாமல் சிசிடிவி கேமராக்களும் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள 3 இடங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் சிகப்பு மண்டலங்களாக அறிவிக்கப்பட்டு ட்ரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான் வழி வாகனங்கள் பறப்பதற்கு சென்னை காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் தடை விதித்துள்ளார்.

இந்த தடை வாக்கு எண்ணிக்கை நடைபெறும் அடுத்த மாதம் 4-ம் தேதி வரை தொடரும் எனவும் காவல் ஆணையர் உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

தடையை மீறி ட்ரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான் வழி வாகனங்களைப் பறக்கவிடும் நபர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

Flying of drones over 3 counting centres banned.

தினத்தந்தி

3 - MAY 2024

தேர்தலுக்கு பிறகு அளிக்கப்படும்

# நலத்திட்டங்களுக்கு வாக்காளர்கள் பெயர் சேர்ப்பதை நிறுத்த வேண்டும்

## அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் கமிஷன் கண்டிப்பு

புதுடெல்லி, மே.3-
தேர்தலுக்கு பிறகு அளிக்கப்பட உள்ள நலத்திட்டங்களுக்கு வாக்காளர்களின் பெயர்களை சேர்ப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

### தீவிரமான பார்வை

தேர்தல் கமிஷன் நேற்று ஒரு அறிக்கை வெளியிட்டது. அதில் கூறப்பட்டு இருப்பதாவது:-

சில அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் சட்டரீதியான கணக்கெடுப்புக்கும், நலத்திட்டங்களுக்கு வாக்காளர்கள் பெயர்களை சேர்க்கும் கட்சிசார்ந்த நடவடிக்கைக்கும் வேறுபாடு தெரியாமல் நடந்து கொள்கின்றன.

தேர்தலுக்கு பிறகு அளிக்கப்பட உள்ள நலத்திட்டங்களுக்கு கணக்கெடுப்பு நடத்துதல் என்ற போர்வையில் வாக்காளர்களின் விவரங்களை சேகரித்து வருகின்றன. இது, ஊழலுக்கு வித்திடும் என்பதால், இதை தீவிரமான பார்வையுடன் அணுகுகிறோம்.

### உடனே நிறுத்த வேண்டும்

தேர்தலுக்கு பிந்தைய நலத்திட்டங்களுக்குபெயர் சேர்க்க வாருங்கள் என்று தனிநபர்களான வாக்காளர்களுக்கு அழைப்பு விடுப்பது, அதற்கு பிரதிபலனாக, தேர்தலில் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்ற ஏற்பாட்டை உருவாக்கவல்லது. இது, ஆசை காட்டுவது போன்றது. எனவே, விளம்பரம் மூலமாகவோ, கணக்கெடுப்பு மூலமாகவோ, செல்போன் செயலி மூலமாகவோ நலத்திட்டங்களுக்கு வாக்காளர்கள் பெயர்களை பதிவு செய்யும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு அனைத்துதேசிய, மாநில அரசியல் கட்சிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Stop registering voters for schemes under guise of surveys, says Election commission

தினத்தந்தி

3 - MAY 2024

### சிவப்பு மண்டலமாக போலீஸ் அறிவிப்பு

# வாக்கு எண்ணும் மையங்களில் 'டிரோன்'கள் பறக்க தடை

சென்னை, மே.3-

சென்னையில் உள்ள 3 வாக்கு எண்ணும் மையங்கள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டு உள்ளன. இந்த பகுதிகளில்'டிரோன்கள்' பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது.

## வாக்கு எண்ணும் மையங்கள்

நாடாளுமன்ற முதற்கட்ட வாக்குப்பதிவு கடந்த மாதம் 19-ந்தேதி நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகளுக்கும் தேர்தல் முடிவடைந்தது. இந்த தொகுதியில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் அந்தந்த வாக்கு எண்ணும் மையங்களில் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டு உள்ளன.

அந்த வகையில் வட சென்னை தொகுதியில் பதிவான வாக்கு எந்திரங்கள் மெரினா ராணி மேரி கல்லூரி மையத்திலும், மத்திய சென்னை தொகுதியில் பதிவான வாக்கு எந்திரங்கள் நுங்கம்பாக்கம் லயோலா கல்லூரி மையத்திலும், தென் சென்னை தொகுதியில் பதிவான வாக்குப்பதிவு எந்திரங்கள் கிண்டி அண்ணா பல்கலைக்கழக மையத்திலும் வைக்கப்பட்டு உள்ளன.

இந்த 3 வாக்கு எண்ணும் மையங்களிலும் 4 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகள் அனைத்தும் 24 மணி நேரமும் கண்காணிப்பு கேமரா கட்டுப்பாட்டில் உள்ளது.

வாக்கு எண்ணிக்கை நடைபெறும் ஜூன் 4-ந்தேதி வரையில் இந்த மையங்கள் போலீசாரின் பாதுகாப்பு வளையத்தில் இருக்கும்.

## சிவப்பு மண்டலம்

இதற்கிடையே சென்னையில் குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழ் 'டிரோன்'கள், இதர ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறப்பதற்கு போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் ஏற்கனவே உத்தரவிட்டு உள்ளார். தற்போது வாக்கு எண்ணும் மையங்கள் மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளை சிவப்பு மண்டலமாக சென்னை போலீஸ்துறை அறிவித்துள்ளது.

எனவே இந்த பகுதிகளில் ஜூன் 4-ந்தேதி வரை 'டிரோன்'கள் மற்றும் இதர ஆளில்லா வான் வழி வாகனங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. இந்த தடையை மீறும் நபர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சென்னை போலீஸ் துறை சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

EVM strong rooms in city declared 'red zones'. Flying of drones will be prohibited.

தினத்தந்தி
3 - MAY 2024

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால்

# அரசியல் தலைவர்களின் புகைப்படங்களை இணையதளத்தில் இருந்து நீக்க வேண்டும்

## பல்கலைக்கழகங்களுக்கு யு.ஜி.சி. அறிவுறுத்தல்

சென்னை, மே.3-

பல்கலைக்கழக மானியக்குழு (யு.ஜி.சி.), அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:-

நாடாளுமன்ற தேர்தல் நாடு முழுவதும் கடந்த ஏப்ரல் 19-ந்தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கிடையில், மத்திய, மாநில அரசுகள் தங்களின் இணையதளங்களில் அமைச்சர்கள், அரசியல் தலைவர்களின் புகைப்படங்களை நீக்க வேண்டும் என்று தேர்தல் கமிஷன் அறிவுறுத்தி உள்ளது. இதற்கான அறிவுறுத்தல்களையும் மத்திய கல்வி அமைச்சகத்துக்கு வழங்கி உள்ளது.

மத்திய, மாநில அரசுகளின் இணையதளங்களில் அரசியல்வாதிகளின் புகைப்படங்கள் இடம்பெற்றால் அவை தேர்தல் விதிகளை மீறுவதாகும் என்று எச்சரித்துள்ளது. எனவே உயர் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Since the MCC are in force, photos of political leaders should be removed from the website.

தினமலர்

13 MAY 2024

# சிவப்பு மண்டல பகுதியில் 'ட்ரோன்'கள் கண்காணிப்பு

சென்னை, மே 3–

சென்னையில், மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள மையங்கள் அருகே, 'ட்ரோன்'கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

லோக்சபா தேர்லை ஒட்டி, சென்னையில் ஓட்டுப்பதிவுக்கு பயன்படுத்தப்பட்ட மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்கள், நுங்கம்பாக்கம் லயோலா கல்லுாரி, மயிலாப்பூர் ராணி மேரி கல்லுாரி, கிண்டி அண்ணா பல்கலை ஆகியவற்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்கள்வைக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும்அதைசுற்றியுள்ள பகுதிகள், சிவப்பு மண்டலங்களாக அறிவிக்கப்பட்டு உள்ளன.

அந்த இடங்களில், ஜூன், 4 வரை, ட்ரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான் வழி வாகனங்கள் பறக்க தடை விதிக்கப்படுகிறது.

எனினும், ட்ரோன் பறக்கவிடப்படுகிறதா என்பது தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது. தடையை மீறுவோர் மீது, சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Flying of drones in 'red zone' area is prohibited.

தினமலர்

13 MAY 2024

# பெயர் நீக்கப்பட்ட வாக்காளர்கள் காரணம் கேட்க தயாராவதால் அதிர்ச்சி

**சென்னை, மே 3–**

கடந்த மாதம், 19ம் தேதி நடந்த லோக்சபா தேர்தலில், ஓட்டுச் சாவடிக்கு சென்றவர்களில் பலரது பெயர்கள், வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருந்தன.

ஓட்டளிக்க முடியாமல் அவர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். கோவை மாவட்டத்தில் மட்டும், ஒரு லட்சம் வாக்காளர்கள் பெயர் நீக்கப்பட்டு இருப்பதாக, தமிழக பா.ஜ., தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டினார்.

**புகார்**

அனைத்து தொகுதிகளிலும், பா.ஜ., வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டதாக, பா.ஜ., சார்பில் மாவட்ட தேர்தல் அலுவலரிடம் புகார் மனு அளிக்கப்பட்டு உள்ளது.

பெயர் நீக்கம் செய்யப்பட்டவர்கள், தனிப்பட்ட முறையில், மாவட்ட தேர்தல் அலுவலரிடம் புகார் மனு அளித்தால், அது குறித்து ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என, தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், பொது தகவல் அலுவலர்கள், மாவட்ட கலெக்டர் அலுவலகம் என்ற முகவரிக்கு, தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ், பெயர் நீக்கம் செய்யப்பட்டவர்கள், அதற்கான காரணத்தை கேட்டு மனு செய்யும்படி, ஒரு தரப்பினர் பிரசாரம் செய்து வருகின்றனர்.

தகவல் கோரி விண்ணப்பிக்க வேண்டிய படிவத்தை, சமூக வலைதளங்களில் பகிர்ந்து வருகின்றனர். அதன்படி, காரணத்தை கேட்டு விண்ணப்பிக்க, பலரும் தயாராகி வரும் தகவல் வெளியாகி உள்ளது. இது, தேர்தல் அதிகாரிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

**சிக்கல்**

இது குறித்து, தேர்தல் அதிகாரிகள் கூறியதாவது:

வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம் செய்யப்பட்டவர்கள், வழக்கமாக ஓட்டுப் பதிவோடு அதை மறந்து விடுவர். தற்போது பெயர் நீக்கப்பட்டதற்கான காரணத்தை கேட்டு, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு செய்ய உள்ளதாக கூறப்படுகிறது.

அனைவரும் மனு செய்ய துவங்கினால், ஒவ்வொரு மனு மீதும் விசாரணை நடத்தி, அதற்கான காரணத்தை தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்படும். இது சிக்கல்களை ஏற்படுத்தும்.

இவ்வாறு கூறினர்.

A complaint has been submitted to DEO regarding deletion of names in Electoral roll

தினமலர்

13 MAY 2024

# தேர்தல் செலவினத்துக்கு இன்னும் நிதி ஒதுக்கவில்லை!

– நமது நிருபர் –

தமிழகத்தில் லோக்சபா தேர்தல் நடத்தியதற்கு இன்னும் நிதி விடுவிக்கப்படாததால், அப்பணிகளை பொறுப்பேற்று செய்த அதிகாரிகள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பணம் கொடுக்க முடியாமல் தவிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

தமிழகத்தில் லோக்சபா தேர்தல் ஓட்டுப்பதிவு, ஏப்ரல் 19ல் நடந்தது. இதற்கான அறிவிப்பு, மார்ச் 16ல் வெளியிடப்பட்டது; அன்றைய தினமே நடத்தை விதிகள் அமலுக்கு வந்தன.

சட்டசபை தொகுதி வாரியாக உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, மண்டல குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன.

அரசியல் கட்சிகளின் விளம்பரங்கள் அழிக்கப்பட்டன; கொடிக் கம்பங்கள் அகற்றப்பட்டன. எம்.எல்.ஏ., அலுவலகங்கள் மூடப்பட்டன. பறக்கும் படை, கண்காணிப்பு குழுக்கள், வீடியோ குழுக்கள் உருவாக்கப்பட்டு வாகனங்கள் ஒதுக்கப்பட்டன. அவற்றில் ஜி.பி.எஸ்., கருவி, 360 டிகிரி கோணத்தில் சுழலும் கேமரா உள்ளிட்டவை பொருத்தப்பட்டன.

தேர்தல் பணியில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன; 100 சதவீத ஓட்டுப்பதிவை வலியுறுத்தி, தீவிர விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. ஒவ்வொரு படிநிலையாக ஏகப்பட்ட பணிகள், தேர்தல் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான செலவினம் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

ஓட்டுப்பதிவு முடிந்து, 10 நாட்களுக்கு மேலாகியும் இன்னும் பணம் வழங்காததால், சம்பந்தப்பட்ட நிறுவனத்தினர், அலுவலகங்களுக்கு நடையாய் நடக்கின்றனர். இன்னும் பணம் ஒதுக்கீடு வரவில்லை எனக்கூறி, அவர்களை தேர்தல் பிரிவினர் திருப்பி அனுப்பி வருகின்றனர்.

**பல லட்சம் ரூபாய் பாக்கி**

தேர்தல் அதிகாரிகள் கூறியதாவது:

வழக்கமாக தேர்தல் பணியின் போது, ஆரம்பத்தில் 50 சதவீத நிதி; தேர்தல் முடிந்ததும் மீதமுள்ள நிதி விடுவிக்கப்படும். இம்முறை தொகை இப்போது வரை ஒதுக்கப்படவில்லை.

பேப்பர் பண்டல் உள்ளிட்ட ஸ்டேஷனரி பொருட்கள் வாங்கியதில் துவங்கி, அலுவலர்களுக்கு உணவு ஏற்பாடு செய்தது, டீ, காபி வாங்கிக் கொடுத்தது, வாகனங்களுக்கு டீசல் நிரப்பியது மற்றும் வாடகை கொடுப்பது, ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் கொண்டு செல்ல லாரிகள் தருவித்தது உள்ளிட்ட பல்வேறு செலவினங்கள் செய்யப்பட்டன. இதற்குரிய தொகை அரசால் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

பணம் கேட்டு, அந்தந்த நிறுவனத்தினர் அலுவலகத்துக்கு தினமும் வருகின்றனர். அவர்களுக்கு பதில் சொல்ல முடியவில்லை.

டீ, காபி, உணவு கொடுத்தவர்களுக்கு எத்தனை நாள் நிலுவை வைப்பது. ஒவ்வொரு நிறுவனத்தினருக்கும் பல லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது.

இதற்குரிய நிதியை விரைந்து விடுவிக்க, தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## பணியை புறக்கணித்தோருக்கு 'நோட்டீஸ்'

லோக்சபா தேர்தல் ஓட்டுச்சாவடி பணியை புறக்கணித்த ஆசிரியர்கள், அலுவலர்களுக்கு, பள்ளிக்கல்வித் துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

தமிழகம், புதுச்சேரியில், 40 தொகுதிகளுக்கும் லோக்சபா தேர்தல் ஏப்., 19ம் தேதி நடந்தது. இந்த தேர்தலில், மாநிலம் முழுதும் ஓட்டுச்சாவடி பணிகளுக்கு, பள்ளிக்கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள், கல்வி அதிகாரிகள், வருவாய் துறையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதில், ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகளில் சிலர், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை கடைசி நேரத்தில் புறக்கணித்தனர். இதையடுத்து, அவசர அவசரமாக மாற்று ஊழியர்கள் நியமிக்கப்பட்டனர்.

மாவட்டம் வாரியாக ஓட்டுச்சாவடி பணிகளை புறக்கணித்தவர்களின் விபரங்கள், கலெக்டர் அலுவலகங்களில் இருந்து பள்ளிக்கல்வித் துறைக்கு அனுப்பப்பட்டு உள்ளன. இதையடுத்து, ஓட்டுச்சாவடி பணியை புறக்கணித்தவர்களுக்கு, மாவட்ட கல்வி அதிகாரிகள் வழியே விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பும் பணி துவங்கியுள்ளது.

தேர்தல் ஆணைய விதிகளுக்கு உட்பட்டு, பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், தேர்தல் பணியை புறக்கணித்த காரணம் என்ன? இதற்காக தங்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என விளக்கம் கேட்கப்பட்டுள்ளது.

Funds have not yet been alloted to Election Expenditure. Notice has been sent to the officials who ignored the Lok Sabha Election works.

தினகரன்
13 MAY 2024

டீப்ஃபேக் வீடியோ விவகாரத்தில்

# தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட முடியாது

## டெல்லி உயர் நீதிமன்றம் மறுப்பு

புதுடெல்லி, மே 3: மக்களவை தேர்தல் நடக்கும் நேரத்தில் தேர்தல் ஆணையத்துக்கு எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது என தெரிவித்த டெல்லி உயர் நீதிமன்றம் வழக்கை முடித்து வைத்தது.

புகைப்படம்,வீடியோ, ஆடியோவை அச்சு அசலாக போலியாக உருவாக்கும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், 'டீப்ஃபேக்' ஆகும். இதன் மூலம் ஒருவரின் புகைப்படம், வீடியோவில் மற்றொருவரின் உருவத்தை ஏற்றி, நிஜம் போல உருவாக்க முடியும்.

இந்நிலையில் வழக்கறிஞர்களின் குரல் என்ற அமைப்பின் தரப்பில் டெல்லி உயர் நீதிமன்றத்தில் பொதுநல மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதில், "மக்களவை தேர்தல் நடந்து வரும் நிலையில் டீப்ஃபேக் தொழில்நுட்பம் மிகவும் தவறான முறையில் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக உள்துறை அமைச்சர் அமித்ஷா, காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, நடிகர்கள் அமீர்கான் மற்றும் ரன்வீர் சிங் ஆகியோரின் வீடியோக்கள் அனைத்தும் இந்த டீப்ஃபேக் தொழில்நுட்பத்தால் தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே இந்த விவகாரம் தொடர்பாக இந்திய தலைமை தேர்தல் ஆணையத்துக்கு ஒரு அறிவுறுத்தலுடன் கூடிய உத்தரவை நீதிமன்றம் பிறப்பிக்க வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.

மேற்கண்ட மனு தற்காலிக தலைமை நீதிபதி மன்மோகன் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தபோது பிறப்பித்த உத்தரவில், "இந்த விவகாரத்தில் மனுதாரர் கூறும் கருத்து ஏற்புடையதாக இருக்காது. அரசியல் பேரணியில் உரையாற்ற செல்லும்போது, தேர்தல் ஆணையத்திடம் அரசியல் வாதிகள் அனுமதி பெற வேண்டும் என்று சொல்வது போல் உள்ளது. மக்களவை தேர்தல் நடந்து வரும் இந்த நேரத்தில் எந்தவித உத்தரவுகளையும் தேர்தல் ஆணையத்திற்கு எங்களால் பிறப்பிக்க முடியாது. இருப்பினும் இந்த விவகாரத்தை தேர்தல் ஆணையத்திடம் விட்டு விடுகிறோம்" என்று தெரிவித்த நீதிபதிகள் மனுவை தள்ளுபடி செய்வதாக தெரிவித்தனர்.

அப்போது தேர்தல் ஆணையத்தின் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்,"மனுதாரர் குறிப்பிட்ட அனைத்து வீடியோக்களும் நீக்கம் செய்யப்பட்டு குற்றவியல் புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார். இதையடுத்து வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

Can't devise policy in middle of polls, the Delhi High court directed to give representation to the Election Commission on its plea on the use of deepfake technologies in the political campaign for GELS, 2024.

தினகரன்

13 - MAY 2024

### தேர்தலுக்கு பிறகு நல திட்டங்களில் பெயர் சேர்க்க

# வாக்காளர் விவரங்களை பதிவு செய்ய அரசியல் கட்சிகளுக்கு தடை

புதுடெல்லி, மே 3: தேர்தல் முடிந்த பிறகு நல திட்டங்களில் பெயர் சேர்க்க வாக்காளர்களின் விவரங்களை சர்வே என்ற பெயரில் பதிவு செய்ய அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.

இது குறித்து தேர்தல் ஆணையம் நேற்று வெளியிட்ட அறிக்கை:

நாட்டின் பல்வேறு பகுதிகளில், சர்வே என்ற பெயரில் வாக்காளர்களின் பெயர்களை அரசியல் கட்சிகள் சேகரித்து வருவதாக தகவல்கள் வந்துள்ளன. நேரிலோ, விளம்பரங்கள், மொபைல் ஆப்கள் மூலம் இந்த பெயர் சேகரிப்பு நடக்கிறது. தேர்தல் முடிந்த பிறகு நலத் திட்டங்களில் சேர்ந்து பலனை பெறுவதற்காக இந்த பெயர்கள் சேகரிக்கப்படுவதாக புகார் வந்துள்ளன. வாக்களிக்க பணம் தருவதும், வாங்குவதும் சட்டப்படி குற்றமாகும் எனவே, சர்வே என்ற பெயரில் வாக்காளரின் பெயர் விவரங்களை சேகரிக்க அரசியல் கட்சிகளுக்கு தடை விதிக்கப்படுகிறது. இதுபோன்ற செயல்களை அரசியல் கட்சிகள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை அனைத்து தேசிய மற்றும் மாநில கட்சிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

Ban of political parties to register voter details to include names in welfare schemes after Election

தினகரன்

13 - MAY 2024

# குடிநீர் பிரச்னையை தீர்க்க உடனடியாக நடவடிக்கை

## பாமக எம்எல்ஏக்கள் தேர்தல் ஆணையத்தில் மனு

சென்னை, மே 3: மக்களின் குடிநீர் பிரச்னையை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக எம்எல்ஏக்கள் தேர்தல் ஆணையத்தில் மனு அளித்தனர்.

சென்னை தலைமை செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரதா சாகுவை பாமக எம்எல்ஏக்கள் வெங்கடேசன் (தர்மபுரி), சதாசிவம் (மேட்டூர்) ஆகியோர் நேற்று சந்தித்து மனு அளித்தனர். பின்னர் அவர்கள் அளித்த பேட்டி:

பருவமழை பொய்த்து விட்டதால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆழ்துளை கிணறுகள் ஆயிரம் அடிக்கு கீழ் சென்று விட்டதால் குடிநீருக்கு மட்டுமின்றி மற்ற பயன்பாட்டிற்கும் நீரின்றி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கால்நடைகளுக்கும் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. லாரிகள் மூலம் குடிநீர் விலைக்கு வாங்கி பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. குடிநீர் பிரச்னை உள்ள இடங்களில் நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான பணிகளை காலதாமதம் ஏற்படாமல் செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடி வாகனங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டும்.

தேர்தல் நடத்தை விதிகளை காரணம் காட்டி பூட்டப்பட்டுள்ள எம்எல்ஏக்கள் அலுவலகத்தை, மக்கள் நலன் கருதி திறக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினருக்கான நிதியில் இருந்து மக்களின் குடிநீர் பிரச்னையை தீர்க்க நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை மேற்கொள்ளவும் அனுமதி அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தலைமை தேர்தல் அதிகாரியிடம் மனு அளித்துள்ளோம்.

PMK MLA submitted petition to the CEO, TN to take immediate action to solve drinking water problem in Tamil Nadu

தினகரன்

13 MAY 2024

₹4 கோடி பறிமுதல் செய்த வழக்கு

# நயினார் நாகேந்திரனின் நெருங்கிய 2 உறவினரிடம் சிபிசிஐடி விசாரணை

சென்னை, மே 3: கடந்த மார்ச் 26ம் தேதி தாம்பரம் ரயில் நிலையத்தில் நெல்லை எக்ஸ்பிரஸ் ரயிலில் பறக்கும்படை நடத்திய சோதனையில் கணக்கில் வராத ₹4 கோடி ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது. பணத்தை கொண்டு வந்த நெல்லை பாஜ வேட்பாளர் நயினார் நாகேந்திரனின் ஓட்டல் மேலாளரும், பாஜ உறுப்பினரான சதீஷ், நவீன், பெருமாள் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது. கடந்த 30ம் தேதி சதீஷ், அவரது சகோதரர் நவீன், லாரி டிரைவர் பெருமாளிடம் 10 மணி நேரம் விசாரணை நடத்தினர்.

இவர்கள் வாக்குமூலத்தின்படி சிபிசிஐடி போலீசார் அனுப்பிய சம்மனை தொடர்ந்து, நயினார் நாகேந்திரன் நெருங்கிய உறவினர் முருகன், ஆசை தம்பி ஆகியோர் எழும்பூர் சிபிசிஐடி தலைமை அலுவலகத்தில் நேற்று காலை 11 மணிக்கு விசாரணை அதிகாரி டிஎஸ்பி சசிதரன் மற்றும் இன்ஸ்பெக்டர் லோகநாதன் முன்பு ஆஜராகினர். முக்கிய பணி காரணமாக ஜெய்சங்கர் ஆஜராகவில்லை.



ஏற்கனவே இந்த வழக்கில் சதீஷ், நவீன், பெருமாள் ஆகியோர் அளித்த வாக்குமூலத்தின் படி முருகன், ஆசை தம்பியிடம் கிடுக்குப்பிடி விசாரணை நடத்தினர். இரவு வரை நீடித்த விசாரணையில், ₹4 கோடி பணம் தொடர்பாக முக்கிய தகவல்கள் முருகன் அளித்த பதிலை வாக்குமூலமாக பதிவு செய்தனர்.

பணத்தை கொண்டு சென்ற சதீஷ், நவீன், பெருமாள் பயன்படுத்திய செல்போன்களை சிபிசிஐடி அதிகாரிகள் நவீன் தொழில்நுட்ப உதவியுடன் யார் யாரிடம் பேசியுள்ளனர் என்ற விவரங்களை சேகரிக்கின்றனர்.

ஓரிரு நாளில் நயினார் நாகேந்திரனுக்கு சம்மன் அனுப்பி விசாரணை நடத்தப்படும் என்று சிபிசிஐடி வட்டாரத்தில் தகவல் வெளியாகி உள்ளது.

CBCID Enquired with close relatives of Nayner Nagendran regarding seizing amount of 4 crore in Tambaram Railway station

தினமணி
13 - MAY 2024

# குடிநீர் பிரச்னையைத் தீர்க்க நடவடிக்கை: தேர்தல் துறையிடம் எம்எல்ஏ-க்கள் மனு

சென்னை, மே 2: குடிநீர் பிரச்னையைத் தீர்க்க, சட்டப் பேரவை உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியை பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென சட்டப்பேரவை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தருமபுரி சட்டப் பேரவை உறுப்பினர் வெங்கடேசன், மேட்டூர் தொகுதி உறுப்பினர் சதாசிவம் ஆகியோர் சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகுவை வியாழக்கிழமை சந்தித்து மனு அளித்த பிறகு கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது அவர்கள் கூறியதாவது:

பருவமழை பொய்த்து விட்டதால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆழ்துளை கிணறுகள் ஆயிரம் அடிக்கு கீழே சென்று விட்டதால் குடிநீருக்கு மட்டுமல்லாது மற்ற பயன்பாட்டுக்கும் நீரின்றி பொது மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கால்நடைகளுக்கும் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. லாரிகள் மூலம் குடிநீர் விலைக்கு வாங்கி பயன்படுத்தும் நிலை உருவாகியுள்ளது. குடிநீர் பிரச்னை உள்ள இடங்களில் நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான பணிகளை காலதாமதம் ஏற்படாமல் செய்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடி வாகனங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, தேர்தல் நடத்தை விதிகளை காரணம் காட்டி பூட்டப்பட்டுள்ள சட்டப்பேரவை உறுப்பினர்கள் அலுவலகத்தை மக்கள் நலன் கருதி திறக்க வேண்டும்.

சட்டப் பேரவை உறுப்பினருக்கான தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மக்களின் குடிநீர் பிரச்னையை தீர்க்க நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதிக்க வேண்டும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் கோரிக்கை விடுத்ததாகத் தெரிவித்தனர்.

PMK MLA submitted petition to the CEO, TN to take immediate action to solve drinking water problem in Tamil Nadu.

தினமணி

13 - MAY 2024

# வாக்கு இயந்திர மைய தலைமைக் காவலர் விபத்தில் மரணம்



ராசிபுரம், மே 2: ராசிபுரம் அருகே வாக்குப் பதிவு மின்னணு இயந்திரம் வைக்கப்பட்டுள்ள மையத்தில் பாதுகாப்புப் பணியை முடித்துவிட்டு வீடு திரும்பியபோது டெம்போ வேன் மோதியதில் பெண் தலைமைக் காவலர் உயிரிழந்தார்.

நாமகிரிப்பேட்டை அருகே உள்ள மெட்டாலா ராஜாபாளையம் பகுதியைச் சேர்ந்தவர் அமுதா (46). நாமகிரிப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வந்தார்.

திருச்செங்கோடு பகுதியில் உள்ள தனியார் கல்லூரியில் வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் பாதுகாப்புப் பணியை முடித்து புதன்கிழமை இரவு 10 மணிக்கு இருசக்கர வாகனத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

ராசிபுரம் புறவழிச் சாலை பொன்குறிச்சி அருகே கல்லுமடை பிரிவு என்ற இடத்தில் வந்தபோது எதிரே வந்த டெம்போ வேன் இவர் மீது மோதியது. இதில் ஹெல்மெட் அணிந்திருந்தும் தலையில் அடிபட்டு நிகழ்விடத்திலேயே அமுதா உயிரிழந்தார்.

புதுசத்திரம் போலீஸார் சடலத்தை மீட்டு ராசிபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுதொடர்பாக வழக்குப் பதிந்து வேன் ஓட்டுநரை கைது செய்தனர். உயிரிழந்த அமுதாவுக்கு கணவர், இரு மகன்கள் உள்ளனர். இவர் ஓட்டப்பந்தயம், ஈட்டி எறிதல், குண்டு எறிதல் போன்ற விளையாட்டுகளில் பல்வேறு பதக்கங்களை பெற்றவர்.

**ஆட்சியர், எஸ்.பி. அஞ்சலி:** ராசிபுரம் அரசு மருத்துவமணையில் அமுதாவின் உடலுக்கு சக காவலர்கள் அஞ்சலி செலுத்தினர்.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் ச. உமா, நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ச.ராஜேஷ் கண்ணன், மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் ஆகியோர் நேரில் வந்து மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர். இதையடுத்து அமுதா சடலம் சொந்த ஊருக்கு கொண்டு செல்லப்பட்டது.

உயிரிழந்த அமுதாவின் குடும்பத்தினருக்கு தேர்தல் ஆணையம் மூலம் ரூ. 15 லட்சம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

Voting machine centre woman head constable died in accident